ICAR-வேளாண்மை அறிவியல் மையம்
(தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம், சென்னை)
திருவண்ணாமலை மாவட்டம்-604 410


# உளுந்து சாகுபடி தொழில் நுட்பங்கள்



**ஆக்கம்**


**செல்வி.மா.ஐஸ்வர்யா,** எம்.எஸ்.சி., (விவசாயம்)
தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்),

**திரு.வே.சுரேஷ்,** எம்.எஸ்.சி., (விவசாயம்)
தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்),

**திரு.ப.நாராயணன்,** எம்.எஸ்.சி., (விவசாயம்)
தொழில்நுட்ப வல்லுநர் (பயிர்பாதுகாப்பு),

# “உளுந்து சாகுபடி தொழில்நுட்பங்கள்”

**1. நிலம் தயாரித்தல்**

உளுந்து விதை உற்பத்தி செய்ய நிலத்தை மண் கட்டிகள் இல்லாதவாறு 3 முதல் 4 முறை நன்கு உழவேண்டும். நிலத்தை கொத்து கலப்பை கொண்டு 3 முறையும் மற்றும் ரோட்டோ வேட்டர் கலப்பை கொண்டு 2 முறை உழ வேண்டும்.

**2. மண் மற்றும் மண்வகை**

உளுந்து சாகுபடி செய்ய வண்டல் மண், வண்டல் கலந்த மணல், செம்மண் மற்றும் மணற்பாங்கான மண் வகைகள் மிகவும் ஏற்றது. வடிகால் வசதியற்ற மண்வகைகள் உளுந்து சாகுபடி செய்ய ஏற்றதல்ல.

**3. பட்டம் மற்றும் பருவம்**

உளுந்து விதை உற்பத்தி செய்ய முக்கியமான பட்டங்கள்.

1. ஆடி பட்டம் - (ஜுன் - ஆகஸ்ட்)
2. புரட்டாசி பட்டம் - (செப்டம்பர் - நவம்பர்)
3. தை பட்டம் - (ஜனவரி - பிப்ரவரி)

**4. உளுந்து ரகங்கள்**

| ரகம் | வயது (நாள்) | மகசூல் (கிலோ/ஏக்கர்) | |
|---|---|---|---|
| | | இறவை | மானாவாரி |
| ADT5 | 62 | 530 | 450 |
| K1 | 70-75 | 300 | 270 |
| CO5 | 70-75 | 500 | 300 |
| VBN 1 | 60-65 | 350 | 300 |
| VBN 2 | 60-70 | 400 | 300 |
| VBN 3 | 65-70 | 330 | 310 |
| VBN 4 | 75-80 | 360 | 310 |
| VBN 5 | 65-70 | 330 | 300 |
| VBN 6 | 65-70 | 360 | 340 |
| VBN 7 | 65-70 | 400 | 350 |
| VBN 8 | 65-70 | 520 | 460 |

**குறிப்பு :-**

மேற்கூறிய இரகங்களில் வம்பன் 6, வம்பன் 7, மற்றும் வம்பன் 8 ரகங்கள் மஞ்சள் நோய்க்கு எதிர்ப்பு தன்மை கொண்டது.

**5. விதையளவு**

உளுந்து சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு 8 கிலோ போதுமானது. ஊடு பயிராக உளுந்து சாகுபடி செய்ய 4 கிலோ தேவைப்படும்.

**6. விதை நேர்த்தி**

உளுந்தில் தோன்றும் வேர் அருகல் நோய், சாம்பல் நோய், இலைப்புள்ளி போன்ற நோய்களை தடுக்க விதை விதைக்கும் முன்பே விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

**i. பூஞ்சாண விதை நேர்த்தி :**

பூஞ்சாண உயிர்க்கொல்லியான டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் / கிலோ விதைக்கு விதை நேர்த்தி செய்ய வேண்டும். உயிர் உரம் ரைசோபியம் விதை நேர்த்தி செய்யும் முன்பே பூஞ்சாண விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

**ii. உயிர் உரம் விதை நேர்த்தி :**

ஒரு ஏக்கர் விதைக்கு 200 கிராம் ரைசோபியம் தேவைப்படும். ஒரு லிட்டர் ஆற வைத்த அரிசி கஞ்சியுடன் 200 கிராம் ரைசோபியம் உயிர் உரத்தை கலந்து 8 கிலோ உளுந்தை விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். உயிர் உரத்தை கொண்டு விதை நேர்த்தி செய்வதனால் பயறுவகை பயிர்களின் வேர்களில் வேர்முடிச்சுகள் தோன்றி மண்ணில் தழைச்சத்தை சேமிக்கின்றது மற்றும் வேரின் வளர்ச்சி அதிகரிக்கின்றது.

**குறிப்பு :**

விதை நேர்த்தி செய்யாவிட்டால் ரைசோபியம் - 800 கிராம் (4 பாக்கெட்) மற்றும் பாஸ்போ பாக்டீரியா – 800 கிராம் (4 பாக்கெட்) /ஏக்கர் உயிர் உரத்துடன் 25 கிலோ நன்கு மட்கிய தொழுஉரம் கலந்து விதைக்கும் முன் வயலில் தூவி விடவேண்டும்.

**7. உர நிர்வாகம் :**

பயறுவகை பயிர்களுக்கு உர மேலாண்மை மிக முக்கியமானதாகும். மண் பரிசோதனை செய்து அதன் அடிப்படையில் உரம் இடலாம் (அல்லது) கீழே கொடுக்கப்பட்டுள்ள பொதுவான உர பரிந்துரையை பின்பற்றவும்.

| உரங்கள் | இறவை<br>கிலோ / ஏக்கர் | மானாவாரி<br>கிலோ / ஏக்கர் |
|---|---|---|
| யூரியா | 22 | 11 |
| சூப்பர் பாஸ்பேட் | 124 | 62 |
| பொட்டாஷ் | 20 | 10 |

**8. இடைவெளி**

உளுந்து விதை உற்பத்தி செய்ய இறவையில் வரிசைக்கு வரிசை 30 செ.மீ மற்றும் பயிர்க்கு பயிர் 10 செ.மீ உள்ளவாறு விதைக்க வேண்டும். மானாவாரி சாகுபடி செய்யும் போது வரிசைக்கு வரிசை 25 செ.மீ மற்றும் பயிர்க்கு பயிர் 10 செ.மீ உள்ளவாறு விதைக்க வேண்டும். ஒரு ஏக்கர் நிலப் பரப்பில் பயிர் எண்ணிக்கை 1,30,000 செடிகள் உள்ளவாறு பராமரிக்க வேண்டும்.

**9. பயிர் விலகு தூரம்**

ஆதார உளுந்து விதை உற்பத்திக்கு விதைப் பயிரானது பிற இரகம் மற்றும் சான்று பெறாத அதே இரகத்திலிருந்து வயலைச் சுற்றி 10 மீட்டர் இடைவெளி விட்டு இருத்தல் வேண்டும்.

**10. நீர் நிர்வாகம்**

விதை விதைத்தவுடன் ஒரு தண்ணீரும், பிறகு உயிர்த்தண்ணீர் மற்றும் மூன்றாவது நாளிலும் பாய்ச்ச வேண்டும். கால நிலை மற்றும் மண்ணின் தன்மைக்கேற்ப 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பயிரின் எல்லா நிலைகளிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**11. இலைவழி நுண்ணூட்டம்**

**i. <u>டி.ஏ.பி கரைசல்</u>**

பயிர் வகை பயிர்களுக்கு இலைவழி நுண்ணூட்டமாக ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் டி.ஏ.பி. (அல்லது) 20 கிராம் யூரியா 1 லிட்டர் நீரில் கலந்து பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும்.

**ii. <u>பயறு ஒண்டர் தெளிப்பு : -</u>**

பயறுவகைப் பயிர்களில் தோன்றும் நுண்ணூட்ட சத்துப் பற்றாக்குறை போக்க இலைவழி தெளிப்பாக TNAU பயறு ஒண்டர் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ வீதம் 35 வது மற்றும் 45 வது நாள் இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

TNAU பயறு ஒண்டர் தெளிப்பதனால் பூக்கள் உதிர்வது தடுக்கப்படுகிறது, பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளரும் மற்றும் 20 சதவீதம் கூடுதலாக மகசூல் பெறலாம்.

<u>குறிப்பு : -</u>

TNAU பயிறு ஒண்டர் கலவையை மாலை 3 மணிக்கு மேல் வெயிலின் தாக்கம் குறைந்த பிறகு இலை மேல் தெளிக்க வேண்டும். பயிறு ஒண்டர் கலவையை வேறு எந்த ரசாயன மருந்துகளுடன் கலந்து தெளிக்கக்கூடாது.

**12. களைக் கட்டுப்பாடு**

பயிறு வகை பயிர்கள் சாகுபடி செய்யும் நிலங்களில் பொதுவாக அனைத்து ஒரு வித்திலை மற்றும் இரு வித்திலை களைகள் தோன்றும்.

**i. <u>களை முளைப்பதற்கு முன் :</u>**

ஒரு ஏக்கருக்கு பென்டிமெத்தலின் 1 லிட்டர் மருந்தை விதை விதைத்த மூன்றாவது நாளில் மண்ணில் போதிய ஈரப்பதம் இருக்கும் போது கைத் தெளிப்பான் கொண்டு 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**ii. <u>களை முளைத்தபிறகு :</u>**

குசலோபாப் ஈத்தைல் 100 மி.லி / ஏக்கர் (மற்றும்) இமாசித்தபயர் 250 மி.லி / ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்.

<u>குறிப்பு :</u>

களைக்கொல்லி மருந்துகளை வேறு எந்த மருந்துகளுடன் கலந்து தெளிக்கக்கூடாது. மண்ணில் போதிய ஈரப்பதம் இருக்கும் போதே களைக்கொல்லி தெளிக்க வேண்டும். உளுந்து விதை விதைத்ததிலிருந்து 20வது நாள் கையால் ஒரு முறை களை எடுக்க வேண்டும்.

**13. அறுவடை :**

உளுந்து செடியில் உள்ள காய்கள் நன்கு முதிர்ச்சியடைந்து கருப்பு நிறமாக மாறியதும் அறுவடை செய்துவிட வேண்டும். அறுவடை செய்த காய்களை உலர் களத்தில் போட்டு நன்கு வெயிலில் சூடேற்றி பிரித்தெடுக்க வேண்டும். பிரித்த விதைகளை 8-9% சதவீதம் ஈரப்பதம் வரும் வரை நன்கு உலர்த்த வேண்டும்.

14. **விதைச் சுத்திகரிப்பு :**

i. உளுந்து காய்களை உடனடியாக 12-13 % ஈரப்பதத்திற்கு உலர்த்தியபின் காய்களை வளையும் மூங்கில் குச்சி கொண்டு அடித்து பிரித்தெடுக்கவும்.

ii. பெரிய விதை கொண்ட இரகங்களை BSS (5x5) சதுர கண் கொண்ட சல்லடைகள் கொண்டும் சிறிய விதை இரகங்களை BSS (6x6) சதுர கண் கொண்ட சல்லடைகளைக் கொண்டும் நல்ல விதைகளைப் பிரித்து எடுக்கலாம்.

iii. உடைந்த மற்றும் நிறம் மாறிய விதைகள் விதைக்காக தேர்வு செய்யக் கூடாது.

**விதை சேமிப்பு : -**

விதைகளின் ஈரப்பதம் 8 முதல் 9 % சதம் இருக்கும் அளவுக்கு சேமிக்கவும்.


**மேலதிக தொடர்புகளுக்கு**
**முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்**
ICAR-வேளாண்மை அறிவியல் மையம்,
கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல், வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்-604410
இணையதளம் : www.kvkthiruvannamalai.com
மின்னஞ்சல் முகவரி : kvktvmalai91@gmail.com
தொலைபேசி : 6384093303